# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032இ
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண் : 0335/ஊரா/2017

ஆணை எண் : 0032/2017

நாள் : 22.03.2017

ஜெ.ஜெயசீலன்,
டாக்டர். அம்பேத்கார் தெரு,
காமக்கூர் பாளையம்,
ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம். — மனுதாரர்

1. கே. எஸ்.கிருஷ்ணன்,
முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்,
காமக்கூர் பாளையம். — எதிர் மனுதாரர்கள்
2. பஞ்சாயத்து செயலாளர்,
காமக்கூர் ஊராட்சி,
ஆரணி வட்டம்.

## ஆணை

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், காமக்கூர் ஊராட்சியில் வசிக்கும் திரு.ஜெ.ஜெயசீலன் அவர்களுடைய 09.03.2017 நாளிட்ட மனுவில், காமக்கூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், அதிகார துஷ்பிரயோகம் செய்து, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்றும், மத்திய மாநில அரசு நிதியில் முறைகேடு செய்துள்ளார் என்றும் இது குறித்து விசாரணை செய்து, கீழ்கண்ட பயன்களை பொதுமக்களுக்கு வழங்கிட வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார் :-

(1) நீர்வரத்து கால்வாய் பணியை முடித்தல், மற்றும் பெரிய ஏரியை தூர்வாருதல்;

(2) கழிப்பறை கட்ட, மத்திய மாநில நிதியை சரியாக வழங்குதல்;

(3) மாராதான் ஏரிக்கு செல்லும் வழியை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றுதல்.

2. 2014 –ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில், ''ஊராட்சி மன்றம்'' மற்றும் ''ஊராட்சி ஒன்றியம்'' என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம், அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

27/3/2017

செயலாளர்

சென்னை–600 032

பெறுநர்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்,
திருவண்ணாமலை. (இணைப்புடன்)

27/3/17

27/3/17

2. ஜெ.ஜெயசீலன்,
டாக்டர். அம்பேத்கார் தெரு,
காமக்கூர்பாளையம்,
ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம். 606 903.